PERMANENT REFERENCE

# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE ALAYADIVEMBU DIVISIONAL SECRETARIAT DIVISION

By

MR. VISVALINGAM KULENTHIRAN

INDEX NO: COM- 45

A dissertation submitted to the Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka, as a partial fulfilment of the requirements of the Bachelor of Commerce Degree (B.Com).

**DEPARTMENT OF COMMERCE**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**

**EASTERN UNIVERSITY, SRI LANKA**

**1996**

60

Library - EUSL

PROCESSED

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| நன்றியுரை | | | |
| அத்தியாயம் | 01 | அறிமுகம் | 01 |
| அத்தியாயம் | 02 | புத்தக ஆய்வு | 04 |
| அத்தியாயம் | 03 | பிரதேச செயலகம் பற்றிய ஆய்வு | 22 |
| அத்தியாயம் | 04 | விவசாயம் | 28 |
| அத்தியாயம் | 05 | கல்வி | 44 |
| அத்தியாயம் | 06 | சுகாதாரம் | 57 |
| அத்தியாயம் | 07 | சிறு கைத்தொழில் | 62 |
| அத்தியாயம் | 08 | சுய தொழில் | 67 |
| அத்தியாயம் | 09 | மீன்பிடி | 73 |
| அத்தியாயம் | 10 | வீட்டு வசதி | 80 |
| அத்தியாயம் | 11 | கூட்டுறவு | 87 |
| அத்தியாயம் | 12 | புனர் வாழ்வு | 92 |
| அத்தியாயம் | 13 | புனரமைப்பு | 97 |
| அத்தியாயம் | 14 | செயற்திட்ட வடிவமைப்பு | 102 |

பின்னிணைப்பு - பிரதேச மட்டத்திலான அடிப்படைத் தரவுகள், படங்கள் 113

உசாத் துணை நூல்கள் 125

## ஆய்வறிக்கை சுருக்கம்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொண்ட ஆய்வின் மூலம் அங்கு காணப் பட்ட வளங்களைக் கொண்டு விவசாயம், கல்வி, சுகாதாரம், மீன்பிடி, வீட்டுவசதி, கூட்டுறவு, சுயதொழில், சிறுகைத்தொழில், புனர்வாழ்வு, புனரமைப்பு, ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப் பட்ட திட்டமிடல் தந்திரோபாயத் திட்டமிடலின் மூலம் பெறப்பட்ட நிறை வேற்றக்கூடிய சுருக்கம்.

இப்பிரதேசத்தில் காணப்படும் விவசாய நிலங்களை உச்சப்பயன்படுத் தலின் நோக்கமாகக் கொண்டு நீர்ப்பாய்ச்சல் வசதி, வடிச்சல் வசதிகளை யும் நல்லின குறுகிய கால விதைகளைப் பயன்படுத்தல் பாமர முறையை கை விட்டு நவீன முறைகளைப் பயன்படுத்தல் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் விவசாயிகளுக்கு உள்ளீட்டுப் பொருட்களை வழங்கி வெளியீட்டுப் பொருட்களை சந்தைப்படுத்தக் கூடிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப் பதன் மூலமான நடவடிக்கைகள் மேற்கொள்வதனால் நெல் விவசாயம் மட் டுமன்றி மேட்டு நிலப் பயிர்களையும் விரிவுபடுத்துவதனால் விவசாயம் மூலம் வருமானத்தைப் அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

கல்வி சம்பந்தமான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதுடன் மக்களின் கலாச்சாரத்துடன் சம்பந்தமான கல்வியை வழங்குவதுடன் ,தொழில் நுட்பக் கல்வியையும் அளிப்பதனால் அதிகமானவர்கள் எதிர்காலத்தில் கல்வி கற்கக் கூடியதாகவும் அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய தாகவும் இருக்கும்.

வைத்திய சாலைகளின் வசதிகள் தேவைகள் விரிவுபடுத்தப்படுவதனால் சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பழக்க வழக்கங்களை சகல பிரிவினருக்கும் உணர்த்துவதனாலும் சுகாதார ஆளணியினரின் குறையை நிவர்த்தி செய்வதனாலும் அரசியல் ரீதியான பாரபட்சம் நீக்கப்படும் நிலையிலும் சகல மக்களும் பொது சுகாதாரத்தை கடைப்பிடிப்பதன் மூலமாக எதிர்காலத்தில் பூரண அபிவிருத்தியை அடையக்கூடியதாக இருக்கும்.

சிறு கைத்தொழிலைப் பொறுத்த வரையில் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாக கடன் வசதிகளையும் உள்ளீட்டுப் பொருட்களையும் வழங்கக் கூடிய தாகவும் வெளியீட்டுப் பொருட்களை சந்தைப்படுத்தக் கூடியதாகவும் திட்டங் களை வகுத்தலும் நவீன முறையிலான பயிற்சிகளை வழங்குவதன் மூலமாக அதிகளவானவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வருமானத்தை பெருக்கி வாழ்க் கைத் தரத்தை அபிவிருத்தி செய்யலாம்.

சுய தொழிலில் ஈடுபடுபவர்கள் தங்களின் கலாச்சாரத் தொழில் களில் ஈடுபடுவதனாலும் போதிய முதலை முதலிடாதவர்களாக இருப்பத னாலும் வருமானத்தை பெருக்க முடியாதுள்ளது. இவற்றை ஈடு செய்வதன் மூலமாக உற்பத்தியை அதிகரிக்கச் செய்து வருமானத்தைப் பெருக்கலாம்.

ஆழ் கடல்ப் பிரதேசத்தை அண்மித்ததாக இருந்தும் ஆழ் கடல் மீன் பிடித்தலில் ஆர்வமற்றவர்களாக இருப்பதன் காரணம் போதிய முதலீடு இன்மையும், ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கான அடிப்படை வசதி இன்மையுமாகும். இவற்றை ஈடுசெய்வதாயின் கடன் வசதிகளை அளிப்பதுடன் நவீன நுட்பங்களை யும் பயிற்றுவிக்கவும் வேண்டும் நன் நீரைப் பொறுத்தவரையில் ஈடுபடுபவர் களுக்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்துவதுடன் நன்னீர் மீன்களை சந்தைப் படுத்தக் கூடிய சகுதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் மீனவர்களின் எதிர் கால சமூக பொருளாதாரத்தை பேணுவதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்தி ஆர்வத்தை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத்தியடையச் செய்யலாம்.

வீடற்றவர்களின் குறைகளை மேற்க்குவதாயின் "யாவர்க்கும் வீடு" அமைக்கும் அரசின் திட்டங்களை இப்பகுதி உயர்மட்ட அலுவலகங்கள் பெற்றுக் கொடுப்பதுடன் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு குறைந்த செலவிலும் அமைப்பதுடன் ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களை இப்பகுதியிலும் அறிமுகப்படுத்திக் கொடுத்தலுடன் மின்சாரக்கடன், மலசல கூடம் அமைப்பதற்கான கடன் ,சிறு கட்டுவதற்கான கடன், போன்ற வற்றுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

கூட்டுறவை அபிவிருத்தி செய்வதன் மூலம் இப்பகுதியில் மக்களின் முன் னேற்றத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதாவது புதிய கிளைகளை நிறுவுதல் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தல் ஏனைய வகை கூட்டுறவு சங்கங்களை நிறுவுதல் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் உள்ளீட்டுப் பொருட் களை வழங்குவதன் மூலம் அவர்களிடமிருந்து உற்பத்திப் பொருட்களை கொள் வனவு செய்து மக்களுக்கு வழங்குவதன் மூலம் தரமான பொருட்களை வழங்குதல், கிராமிய வங்கி சேவையை ஆரம்பித்து மக்களின் சேமிப்பை ஊக் கப்படுத்தலும் கடன்வசதிகளை அளித்தலும்.

புனர்வாழ்வுத் திட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங் களுக்குத் தேவையான உதவிகளை மேற்க் கொள்ளும் போது பாதிக்கப்பட்ட வரின் குடும்பத்தவரை நேரடியாக சேரக் கூடியதாக நடவடிக்கைகளை எடுத்தல, அத்துடன் உடனடியாக கிடைக்கவும் வழி செய்தல் மேலும், அயல் பிரதேசங்களில் இயங்கும் இணைப்பயிர்களின் சேவையை கொண்டதான

சேவைகளையும் நடைமுறைக்கு கொண்டு வரல் மூலம் பாதிக்கப்பட்டவர்களை இனம் கண்டு உடனடி நடவடிக்கைகளையும் பெறலாம்.

புனர்மைப்புப் பணிகளுக்கென ஒதுக்கப்படும் நிதியானது குறிப்பிட்ட திட்டங்களை பூரணமான முறையில் பூர்த்தி செய்யக்கூடியதாக திட்டங்களை உருவாக்குதல் அப்படி உருவாக்கப் படுமானால் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டவையாக காணப்படும் பட்சத்தில் துறை ரீதியான வளர்ச்சியை ஏற்படுத்தி அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.